# மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு

அன்பான தோழரே, நாள் : 06/02/2012

மின்வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழு தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் தோழர்.எஸ்.எஸ்.சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் 06.02.2012 அன்று சென்னை மின் வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் தமிழ்நாடு மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக திரு.சிங்கார இரத்தின சபாபதி/பொதுச் செயலாளர், திரு.இரெ.பரமசிவம் / பொருளாளர். ஐஎன்டியுசி சார்பாக திரு.டி.வி.சேவியர் / பொதுச் செயலாளர், தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் சார்பாக தலைவர் தோழர்.கே.விஜயன், பொருளாளர் தோழர்.து.கோவிந்தராஜு, பி.எம்.எஸ் சார்பாக தலைவர் - முரளி கிருஷ்ணன், பொதுச் செயலாளர் - திரு.சந்திரன், தொழிலாளர் ஐக்கிய சங்கம் சார்பாக (எச்எம்எஸ்) தலைவர் - திரு.மனோகரன், பொதுச் செயலாளர் - திரு.எம்.சுப்ரமணியன், பொறியாளர் கழகத்தின் சார்பாக தலைவர் - திரு.அப்பர்சாமி, பொறியாளர் சங்கத்தின் சார்பாக பொதுச் செயலாளர் - திரு. வி.அசோக்குமார், திரு. ஜி. முரளிகிருஷ்ணன் - செயலாளர்/நலநிதி, தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பின் தலைவர் - திரு. டி. அறிவழகன், மாநில செயலாளர் - திரு. ஏ. பழனி ஆகியோர் கலந்து கொண்டனர்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்து, வேலை வாய்ப்பை பறிக்காதே, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கு, பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்காதே, பொதுத் துறையை தனியார் மயமாக்காதே, 1.12.2011 முதல் மின்வாரிய ஊழியர்களுக்கு புதிய ஊதிய உயர்வு வழங்கிடு, மின்வாரியத்தில் உள்ள காலி இடங்களை நிரப்பி மக்கள் சேவையை தொடர்ந்திடுக என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஐஎன்டியூசி உள்ளிட்ட மத்திய தொழிற்சங்கங்களும், 40க்கும் மேற்பட்ட தொழில்வாரியான சம்மேளனங்களும் இணைந்து 28.12.2012 அன்று நடைபெறும் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தில் மின் வாரிய ஊழியர்கள் திரளாக கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (அதில் பொறியாளர் கழகமும், பொறியாளர் சங்கமும் அப்போராட்டத்திற்கு தார்மீக ஆதரவு தருவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.)

இந்த வேலை நிறுத்த அறிவிப்பினை மின்வாரிய நிர்வாகத்திற்கு அறிவிக்கும் விதமாக இரு பொறியாளர்கள் அமைப்பு தவிர மற்ற அனைத்து அமைப்புகளும் பிப்ரவரி 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் வேலை நிறுத்த நோட்டீஸ் தனித்தனியாக வழங்குவது, அதோடு வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளுகின்ற சங்கங்கள் கூட்டான வேலை நிறுத்த அறிவிப்பையும் வாரியத்திற்கு வழங்குவது.

வேலை நிறுத்த கோரிக்கைகளை மின்வாரிய ஊழியர்கள் மத்தியில் கொண்டு செல்லுகின்ற வகையில் கூட்டு நடவடிக்கைக் குழு சார்பாக சுவரொட்டி ஒன்று தயாரித்து கிளைகளுக்கு அனுப்புவது.

அனைத்து வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்னால் பிப்ரவரி 22 அன்று கூட்டு நடவடிக்கை குழு சார்பாக வேலை நிறுத்த கோரிக்கை பிரச்சாரத்தை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இம்முடிவுகளை முழுமையாக அமல்படுத்தி வேலை நிறுத்தத்தை வெற்றிபெற செய்ய வேணுமாய் நடவடிக்கைக் குழு கேட்டுக்கொள்கிறது.

சமீபத்தில் வீசிய தானே புயலால் பாதிக்கப்பட்ட கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் புயல், வெள்ள நிவாரண பணிகளை ஊண் உறக்கமின்றி இரவு பகல் பாராமல் புயல் வேகத்தில் செய்து முடித்த பொறியாளர்கள், அதிகாரிகள், ஊழியர்கள், களப்பிரிவு தொழிலாளர்கள், மஸ்தூர்கள், தினக்கூலி தொழிலாளர்கள் அனைவரையும் இக்கூட்டு நடவடிக்கைக்குழு மனதார பாராட்டுவதோடு, வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

இங்ஙனம்

**சிங்கார ரத்தினசபாபதி**
(பொதுச் செயலாளர்)
தமிழ்நாடு மின்கழக தொழிலாளர்
முன்னேற்ற சங்கம்

**எஸ்.எஸ். சுப்பிரமணியன்**
(பொதுச் செயலாளர்)
தமிழ்நாடு மின்ஊழியர்
மத்திய அமைப்பு (சிஐடியு)

**டி.வி. சேவியர்**
(பொதுச் செயலாளர்)
ஐ.என்.டி.யு.சி

**என். சந்திரன்**
(பொதுச் செயலாளர்)
பி.எம்.எஸ்

**எம். சுப்பிரமணியன்**
(பொதுச் செயலாளர்)
மின்வாரிய ஐக்கிய தொழிலாளர் சங்கம்

**சங்கர நாராயணன்**
(பொதுச் செயலாளர்)
மின்வாரிய பொறியாளர் கழகம்

**வி. அசோக்குமார்**
(பொதுச் செயலாளர்)
மின்வாரிய பொறியாளர் சங்கம்

**தி. அறிவழகன்**
(தலைவர்)
தமிழ்நாடு மின்துறை பொறியாளர் அமைப்பு